வானவில்

VAANAVIL
ISSUE – 13 JANUARY 2012

இதழ் - 13 தை 2012

# பாராளுமன்றத் தெரிவுக் குழுவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான களம்!

**'வானவில்'** 2011 டிசம்பர் இதழில் நாம் எழுதிய தலைப்புச் செய்தியில், அரசாங்கத்துக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சம்பந்தமாக, சில முக்கியமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்திருந்தோம். நாம் முன்வைத்த கருத்துக்கள், ஆலோசனைகள் என்பது எமது தனிப்பட்ட வெளியீடுகள் அல்ல. அவை நாம் அன்றாடம் பழகும் தமிழ் சமூகத்தினதும் மற்றும் இலங்கை மக்களினதும் அபிப்பிராயங்களைத் தொகுத்தே முன்வைக்கப்பட்டன.



எனவே இவை தமக்குத் தாமே மகுடம் சூடிக்கொள்ளும் 'தமிழ் சிவில் சமூகம்' அல்லது 'தமிழ் புத்திஜீவிகள்' என்ற ஒரு குறுகிய வட்டத்தினரின் கருத்துக்கள் அல்ல.

'வானவில்' மூலமாக இனப்பிரச்சினைத் தீர்வில் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பவர்களின் அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்ட பின்னர், இலங்கையின் அரசியல் அரங்கில் சில ஆக்கபூர்வமான போக்குகள் மேலெழுந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. நாம் முன்வைத்த கருத்துக்களை ஒட்டிய அல்லது அண்மித்த கருத்துக்களை அமைச்சர்கள் திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார, குணரத்தின, ரவூப் ஹக்கீம் என்போரும், ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், அவரது சகோதரரும் பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் ஆகியோரும் முன்வைத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. சில அரசியல் ஆய்வாளர்களும் அதையொட்டி கட்டுரைகள் தீட்டியுள்ளனர்.

அதேநேரத்தில் அரசாங்கமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமது கடுமையான நிலைப்பாடுகளிலிருந்து சற்று இறங்கி வந்ததையும் அவதானிக்க முடிந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கு இணைப்பு என்பதை அழுங்குப் பிடியாக வலியுறுத்துவதை நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிகிறது. மறுபக்கத்தில் அரசாங்கம் மாகாணசபைகளுக்குரிய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்துப் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இவை நல்ல சகுனங்கள்.

ஆனாலும் அரசாங்கத்துக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமான பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்கும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று ஏற்படாமல் பார்த்துக் கொள்வதிலும், இரு தரப்பிலுமுள்ள சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்படுவதும் தெரிகின்றது. அரசாங்க அமைச்சரவையிலுள்ள சில பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் எதுவும் வழங்கக்கூடாது என தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். அதேபோல தமிழ் தேசியக் கூட்டமைப்பிலுள்ள புலிகளுக்கு சார்பான மற்றும் குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியீடு

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கப்பாடு (COMMISSION OF INQUIRY ON LESSONS LEARNT AND RECONCILIATION) தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை 16.12.2011 இல் இலங்கையின் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்டது. 2009 ஆண்டு வன்னியில் முடிவடைந்த புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தில், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிப்பதற்கென இலங்கை ஜனாதிபதியினால் 15.05.2010 இல் எட்டுப்பேர் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவினர் 388 பக்கங்களைக் கொண்ட தமது அறிக்கையினை 20.11.2011 இல் ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இலங்கை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு வெறும் கண்துடைப்பென உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரச்சாரம் செய்தவர்களால், இவ்வறிக்கை ஒருபோதும் வெளியிட்ப்படமாட்டாது என்ற பிரச்சாரமும் முன்னெடுக்கப்பட்டது. இந்த பிரச்சாரங்களுக்கு கடந்தகாலங்களில் இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் வெறும் ஆவணங்களாகவே இருப்பதாக உதாரணமாக சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் இந்த பிரச்சாரங்கள் அனைத்தையும் முறியடிக்கும் வகையில் இவ்வறிக்கை பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்டது வரவேற்கப்பட வேண்டியதே. இவ்வறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட்டதை இந்தியா, ஐக்கிய நாடுகள் சபை, பொதுநலவாய நாடுகளின் அமைப்பு என்பன வரவேற்றுள்ளன. யுத்த மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் மனித உரிமை அமைப்புகளும் சில மேற்கத்தைய நாடுகளும் இவ்வறிக்கையின் உள்ளடக்கத்திலுள்ள சில குறைபாடுகளை சுட்டிக்காட்டி அறிக்கைகள் வெளியிட்டுள்ளன. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கை அரசு பகிரங்கப்படுத்தியதை பொறுக்க முடியாத தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இவ்வறிக்கையினை சர்வதேச ரீதியில் பகுப்பாய்வுக்கு உட்படுத்த வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்.

இலங்கை அரசின் பாதுகாப்பு படையினர் சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறவில்லை எனவும் யுத்த சூனிய பிரதேசத்தில் அரச பாதுகாப்பு படையினர் அநாவசியமாக பொது மக்களை இலக்கு வைத்து தாக்கவில்லை எனவும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் வன்னி இறுதிக்கட்ட யுத்தத்தில் இலங்கை அரச படைகளுக்கும் புலிகளும் இடையே இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் பொது மக்கள் கொல்லப்பட்டதாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒப்புக் கொண்டுள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்து அரச பாதுகாப்பு படையினர் உள்ள பகுதிகளுக்குச் சென்ற பொதுமக்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் கண்ணிவெடிகளைப் புதைத்து வீதித் தடை விதித்ததாகவும் இவ்வறிக்கை தெரிவித்துள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தில் யாராவது வரம்பு மீறலுக்கு முகம் கொடுத்திருப்பாராயின், அதற்கான சான்றாதாரங்கள் இருப்பின், அவை குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பாக வெளியாகியிருக்கும் வீடியோ காணொளி காட்சிகளின் உண்மை மற்றும் நம்பகத்தன்மை தொடர்பாக நிலவும் சகல சந்தேகங்களையும் நீக்குவதற்காக சுயாதீன புலன் விசாரணை நடத்துமாறும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

இவ்வறிக்கை பலவிதமான பரிந்துரைகளை (Recommendations) முன்வைத்துள்ளது. எல்லா பரிந்துரைகளையும் அரசினால் ஒரேயடியாக நிறைவேற்ற முடியாது. ஆனால் அறிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்து பரிந்துரைகளையும் அரசு படிப்படியாக நிறைவேற்ற முன்வரவேண்டும். அப்போதுதான் அறிக்கையினை பகிரங்கப்படுத்தியது மாத்திரமன்றி, ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நிறைவேற்றிய பெருமையும் அரசுக்கு சேரும்.

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# முதலாளித்துவத்தின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது!

## சர்வதேச மாநாட்டில் சீத்தாராம் யெச்சூரி உரை



“முதலாளித்துவத்திற்கு எதிரான அரசியல் மாற்றை உருவாக்க நாம் அனைவரும் களத்தில் இறங்குவோம். உலகில் முதலாளித்துவ முறைக்கு எதிராக கம்யூனிஸ்ட்டுகள் மட்டுமல்ல, கம்யூனிஸ்ட் அல்லாத மக்களும்கூட கிளர்ந்தெழுந்து போராடிக் கொண்டிருக்கக்கூடிய தருணத்தில், சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 13வது மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கிரீசில் மக்கள் போராட்டங்கள் வீச்சுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இத்தருணத்தில் நாம் இங்கே இம்மாநாட்டை நடாத்திக் கொண்டிருப்பது பெருமைக்குரியது”

இவ்வாறு கிரீஸ் நாட்டின் தலைநகர் ஏதென்ஸ்சில் 2011 டிசம்பர் 9ம் திகதி முதல் 11ம் திகதி வரை நடைபெற்ற சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் சீத்தாராம் யெச்சூரி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், “இம்மாநாட்டின் கருப்பொருள் மூன்று முக்கிய அம்சங்களை முன்வைத்தது. முதலாவது சோவியத் யூனியனில் எதிர்ப்புரட்சிக்குப் பின்னர் கடந்த இருபது ஆண்டுகளில் கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஏற்பட்ட அனுபவம். சோசலிசத்தைக் கட்டுவதில் ஏற்பட்ட மிகப்பெரிய குறைபாடுகள், ஏகாதிபத்தியம் மற்றும் முதலாளித்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டமை, சோசலிசம் குறித்து அதீதமான மதிப்பீடு, மார்க்சிச – லெனினிசத்தின் அறிவியல் பூர்வமான மற்றும் புரட்சிகரக் கோட்பாடுகளிலிருந்து விலகிச் சென்றமை ஆகியவையே சோவியத் யூனியனில் எதிர்ப்புரட்சி உருவானதிற்குக் காரணங்களாகும்.

மாநாட்டுக் கருப்பொருளின் இரண்டாவது அம்சத்தைப் பொறுத்தவரையில், மேலே கூறியவாறு நடைபெற்ற நிகழ்ச்சிப் போக்குகள் ஏகாதிபத்தியமானது உலகம் முழுவதும் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும், தத்துவார்த்த ரீதியாகவும் தன்னுடைய மேலாதிக்கத்தை வலுப்படுத்திட மூர்க்கத்தனமான தாக்குதலைத் தொடுத்திட வழிவகுத்தது. ஆயினும் முதலாளித்துவம் அபரிமிதமான முறையில் வளர்ச்சி அடைந்திருந்த போதிலும்கூட, அதனால் தன்னை ஒரு சுரண்டலற்ற அமைப்பாகவோ அல்லது நெருக்கடியற்ற அமைப்பாகவோ நிறுவ முடியவில்லை என்பது மீண்டும் வலுவாக மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

உலக முதலாளித்துவம் தனக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக எடுத்திடும் ஒவ்வொரு முயற்சியும் அதனை மேலும் ஓர் ஆழமான புதிய நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. உற்பத்தி உறவுகளை அழித்திடுவதையே தன் ஒவ்வொரு முயற்சியின் போதும் உலக முதலாளித்துவம் கைக்கொள்கிறது. இதன் காரணமாக அது மக்கள் மீதான சுரண்டலை மேலும் உக்கிரப்படுத்துகிறது. சமீபத்தில் உலகின் பல நாடுகளில் கார்ப்பரேட்டுகள் தங்களுக்கு ஏற்பட்ட திவால் நிலையை அந்தந்த நாட்டு அரசுகளின் திவால் நிலையாக மாற்றியதிலிருந்து இக்கொடூரத்தை நம்மால் பார்க்க முடிந்தது. அதன் காரணமாக அந்த அரசுகள் மக்களுக்கு அளித்து வந்த பல்வேறு நலத்திட்டங்களை வெட்டிக்குறைத்தன. இவ்வாறு அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு வளர்ந்தோங்கி வருகின்றன.

முதலாளித்துவத்தைத் தூக்கி எறியவும் சோசலிசத்தைக் கட்டிடவும் வலுவான முறையில் தொழிலாளர் வர்க்க சர்வதேசியத்தையும், ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியையும் கட்ட வேண்டியது இன்றைய அவசியத் தேவையாகும். இதற்கு இங்கு குழுமியுள்ள அனைத்து

கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளும் தங்கள் நாடுகளில் நடைபெறும் வர்க்கப் போராட்டங்களைக் கூர்மைப்படுத்தும் அதே சமயத்தில், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தையும், முதலாளித்துவத்திற்கு மாற்று சோசலிசமே என்கிற அரசியல் மாற்றுக்கான போராட்டத்தையும் வலுப்படுத்திட வேண்டும். சோசலிசம் என்கிற நம் அரசியல் மாற்றை வலுப்படுத்திடக்கூடிய வகையில் மக்களை அணிதிரட்டிட வேண்டும். வளர்ந்து வரும் மக்கள் போராட்டங்கள் நிச்சயமாக முதலாளித்துவ அமைப்பு முறையை ஒருநாள் தூக்கி எறியும்.

முதலாளித்துவத்திற்கு எதிரான புறச் சூழ்நிலைகள் வேகமாகவும் நமக்குச் சாதகமாகவும் வளர்ந்து வருகின்றன. ஆயினும் மாமேதை லெனின் எச்சரித்தது போல, அதற்கேற்ற வகையில் நாம் அகக் காரணிகளையும் வளர்த்தெடுக்க வேண்டும். மார்க்சிசம் – லெனினிசம் என்கிற புரட்சிகர தத்துவத்தினை ஏற்றுக்கொண்டுள்ள தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் ஒன்றுபட்ட போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

வரலாற்றுத் தொலைநோக்கில் நிச்சயம் சோசலிசம் தவிர்க்க முடியாதது. அது தாமதப்படலாம். ஆயினும் அது வருவதை எவரும் தடுத்திட முடியாது. எவ்வளவு விரைவாக அது வரும் என்பது நம்மையே சார்ந்திருக்கிறது. அதனை விரைவுபடுத்தும் பணிகளை நாம் முடுக்கி விடுவோம். ''சோசலிசத்திற்கு எதிர்காலம் உண்டா?'' என்று இனியும் எவரும் கேட்டகக்கூடாது. சோசலிசத்திற்கு நிச்சயம் எதிர்காலம் உண்டு'' என்று கூறினார். *

# ஆயுத ஏற்றுமதியில் பிரான்ஸ் நான்காவது இடம்!

சர்வதேச ரீதியிலான ஆயுத ஏற்றுமதியில் பிரான்ஸ் நான்காவது இடத்தை வகிப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. 2010ல் அதன் ஆயுத ஏற்றுமதியின் மொத்தப் பெறுமதி 7.12 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். எல்லாவிதமான நவீன தொழில்நுட்பங்களையும் கொண்ட ஆயுதங்களைத் தயாரிக்கும் ஒருசில நாடுகளில் பிரான்சும் ஒன்றாகும். இருப்பினும் அமெரிக்காவே இன்னமும் உலகின் ஆயுத ஏற்றுமதியில் முன்னணியில் உள்ள நாடாகும்.

ஆமெரிக்கா உலகின் மொத்த ஆயுத ஏற்றுமதியில் 53.7 வீதத்தைக் கொண்டுள்ளது. பிரான்ஸ் ஆக 6 வீதத்தையே கொண்டுள்ளது. பிரான்சின் ஆயுத ஏற்றுமதியில் 27 சதவீதம் மத்திய கிழக்கிற்கும், 25 சதவீதம் லத்தீன் அமெரிக்காவிற்கும், 18 சதவீதம் ஆசியாவிற்கும் செல்கின்றன.

2010 – 11ம் ஆண்டுகளில் உலக ஆயுத சந்தையில் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ரஸ்யா மற்றும் இஸ்ரேல் என்பன 90 சதவீத ஆதிக்கத்தைக் கொண்டிருந்துள்ளன. இதிலிருந்து உலகம் முழுவதும் யுத்தங்களைத் தூண்டிவிட்டு, அதில் ஆயுத விற்பனை செய்து கோடிகோடியாகப் பணம் சம்பாதிப்பவர்கள் யார் என்பது புரிகிறதல்லவா? மற்றும்படி இவர்கள் உலக சமாதானம் பற்றி தொண்டை கிழியக் கதைப்பதெல்லாம், 'ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத' கதைதான்!

சாராம்சத் தகவல்: IANS

# யாழ்ப்பாணத்தில் புதிய பொலிஸ் தலைமையகம்

யாழ் மாவட்டத்துக்கான புதிய பொலிஸ் தலைமையகக் கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் 2012 ஜனவரி 12ஆம் திகதி நாட்டப்பட்டுள்ளது. அடிக்கல்லை பாரம்பரிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைத்தார்.

இந்த வைபவத்தில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

யாழ். பொலிஸ் நிலையம் முதன்முதலில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் 1927ம் ஆண்டு அமைக்கப்பட்டது. அது படிப்படியாக வளர்ச்சி அடைந்து நாட்டின் மிக முக்கிய பொலிஸ் நிலையங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. புலிகள் தனித் தமிழீழத்துக்கான போராட்டத்தை ஆரம்பித்த பின்னர், பல தடவைகள் அப்பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடாத்தி வந்தனர். இறுதியாக 1984 ஏப்ரலில் அந்தப் பொலிஸ் நிலையம் செயல்பட முடியாதவாறு கடுமையாகத் தாக்கி சேதப்படுத்தியிருந்தனர்.

முன்னர் பொலிஸ் நிலையம் அமைந்திருந்த இடத்திலேயே (துரையப்பா விளையாட்டு அரங்கு, கோட்டை என்பனவற்றுக்கு அருகாமை) தற்போதைய பொலிஸ் நிலையமும் அமைக்கப்பட உள்ளது. இதற்கென அரசாங்கம் 294 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

# சம்பந்தப் பெருமானும் சரவணப் பொய்யரும்!

*–மொழிவரதன்*

'**த**மிழ் சிவில்' சமூகம் என்ற பெயரில் சிலர் ஒன்றுசேர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அனுப்பிய புலிகளின் பாணியிலான கடிதத்திற்கு, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பதில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அவருடைய கடிதத்தில் கூறப்பட்டுள்ள சில விடயங்களை வைத்துப் பார்க்கையில், அக்கடிதத்தின் நம்பகத் தன்மையே கேள்விக்குறியாகின்றது. சம்பந்தனின் பதில் கடிதப்படி, அந்த மகஜரில் ஏராளமானோரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தும், அவர்கள் எவரினதும் கையெழுத்துகள் அதில் இருக்கவில்லை.

அடுத்த விடயம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் பெரும்பாலோர் மக்களுக்குத் துளியும் பரிச்சயமில்லாத அநாமதேயங்கள். அதிலும்கூட பலர் தங்களுக்கும் அதில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை எனக் கூறியதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அப்படியானால் இது ஒரு மோசடிக் கடிதமா? இந்தக் கூறப்படும் கடிதத்தில் முதலாவது பெயராக மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப்பு அவர்களின் பெயர் உள்ளது. அப்படியானால் அவரும் இந்த அநாமதேயக் கடிதத்தில் சம்பந்தப்பட்டுள்ளாரா? ஏற்கெனவே அவர் புலிகளின் காலத்தில் எடுத்த நிலைப்பாடுகள், விடுத்த அறிக்கைகள் காரணமாக, 'வெள்ளை அங்கி தரித்த புலி' என சில தரப்புகளால் குற்றம் சாட்டப்பட்ட நிலையில், இந்தக் கடிதம் அவரை மீண்டும் சர்ச்சையில் சிக்க வைத்துள்ளது.

இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு விடயம், அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்றுவரும் இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை எப்படியும் குழப்பிவிட வேண்டும் என்பதில், கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் (சிறீதரன், அரியநேத்திரன், சரவணபவன் முக்கியமானவர்கள்) உட்பட சில சக்திகள் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றன. இந்த முயற்சிகளுக்கு இல்லாத பொல்லாத பொய்ச் செய்திகளையெல்லாம் இட்டுக்கட்டி, யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகை களமமைத்துக் கொடுத்து வருகின்றது. இதன் மூலம் அரசின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தி, தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அரச எதிர்ப்பு நிலையில் வைத்திருந்து, அவர்களுக்கு எதுவுமே கிடைக்காமல் பார்த்துக் கொள்வதுதான் உதயனின் நோக்கம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.சரவணபவனுக்கு சொந்தமான உதயன் பத்திரிகை இத்தகைய விசமத்தனங்களில் ஈடுபட்டாலும், கூட்மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தமிழ் சிவில் சமூகத்தின் கடிதத்துக்கு அனுப்பி வைத்துள்ள பதிலில் இவ்வாறு கூறியிருக்கிறார்:

''அரசாங்கத்திற்கும் எமக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இடம்பெறும் எல்லா விடயங்களையும் பொதுமக்களிற்கு வெளியிடுவது சாத்தியமற்றதாகும். எனினும் ஏற்றுக் கொள்ளக்கூடியதும் நடைமுறைச் சாத்தியமானதும் நிலையானதும் பெரும்பான்மையான எமது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியதுமான அரசியல் தீர்வை நோக்கியதாக எமது பேச்சுவார்த்தை கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன்''

சம்பந்தனின் இந்தக் கூற்று சொல்வது என்ன? சரவணபவனின் உதயன் பத்திரிகை சொல்வதற்கு மாறாக, அரசுடனான பேச்சுவார்த்தை ஆரோக்கியமான திசை வழியில் பயணிக்கிறது என்பதையல்லவா? அப்படியானால் சரவணபவன் தலைவர் சம்பந்தனின் கூற்றுக்கு எதிராக விசமத்தனம் செய்வதும், அவர் மீது கூட்டமைப்பு நடவடிக்கை ஏதும் எடுக்காதிருப்பதும் ஏன்? இதுமட்டுமல்ல, கூட்டமைப்பின் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நட்பின் நிமித்தம் கிரிக்கெட் விளையாடியது பற்றி வாசகர்களிடம் அபிப்பிராயம் கேட்பது என்ற போர்வையில், சுமந்திரனுக்கு எதிரான கருத்தை உதயன் உருவாக்கி வருகிறது. சரவணபவனின் இந்த கபடத்தனமான, கட்டுப்பாடற்ற போக்கை, கூட்டமைப்புத் தலைமை தடுத்து நிறுத்த வக்கற்றுப் போய்விட்டதா என்ற கேள்வியும், அதன் ஆதரவாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஒரு பத்திரிகை என்ற சர்வ வல்லமையுள்ள ஊடக ஆயுதத்தை வைத்துக் கொண்டு, சரவணபவன் தமிழ் கூட்டமைப்பையே தனது கைக்குள் போட எடுக்கும் முயற்சியை, அதன் தலைமை எத்தனை நாளைக்கு வேடிக்கை பார்க்கப் போகிறதோ தெரியவில்லை. *

---

'நாளையே நாடு திருந்தும் எனும் ஹஸாரேத்தனம் என்னிடம் இல்லாததால், வெதும்பி, விம்மி என் பராசக்தியிடம் கேட்கிறேன். என் மக்களுக்கு புத்தி கொடு, அல்லது அவர்களது கீழ்மையையாவது என் கண்களில் படாது மறைத்திடு!'

**– டாக்டர் ருத்ரன், சென்னை**

**இ**லங்கையில் தமிழர்கள் தமது இன விகிதாசாரத்தையும், வரலாற்று எல்லையின் உண்மையையும், கலாச்சாரப் பாரம்பரியங்களையும் அடிப்படையாகக் கொண்டு தமது உரிமைப் போராட்டங்களை நடாத்தியிருந்தால், அது சில வேளைகளில் அனைத்துலக ஆதரவை மட்டுமின்றி, பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவையும் பெற்று வெற்றி பெற்றிருக்கக்கூடும். ஆனால் அவர்கள் யதார்த்தத்துக்குப் புறம்பான போக்கில் – குறிப்பாக தனிநாடு அமைப்பதை நோக்காகக் கொண்டு போராடியதால்தான், இன்று முன்னர் இருந்தவற்றிலும் பலதை இழந்து நிற்கின்றனர்.




முக்கியமாக, இலங்கைத் தமிழர்களின் ஒழுங்கான வரலாற்றைக்கூட எழுதுவதற்கு இன்றுவரை எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. கலாச்சார அரங்கிலும் முன்னர் இருந்த கொஞ்சநஞ்ச நாட்டுக் கூத்துகள், கரகம் – காவடியாட்டம் போன்றவை கூட கைவிடப்பட்டுவிட்டன. நவீன நாடகத்துறையில் 70 – 80களில் சில முயற்சிகள் எடுக்கப்பட்டதாயினும் அவையும் இன்று இல்லை. சிற்பம், ஓவியம் என்பனவற்றுக்கான முயற்சிகளும்

# இலங்கை தமிழ் சினிமா: அன்றும் இன்றும்

***காவலூர் பாலன்***

அருகிப்போய்விட்டன. பெருமையை நிலைநாட்டுவதற்காகத் தன்னும் முன்னர் அரங்கேற்றி வந்த பரத நாட்டியமும் கூட மறைந்து வருகிறது.

இத்தகைய ஒரு சூழல் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது' போல ஆரம்பிக்கப்பட்ட தனிநாட்டுப் போராட்டம் தான் என்பதை இப்பொழுதாவது எத்தனை பேர் ஏற்றுக்கொள்ளத் தயார்? தனது வரலாற்றையும் கலாச்சாரத்தையும் தெரிந்து கொள்ளாத, பேணிக்காக்காத எந்தவொரு இனமும் இன்றைய உலகில் வாழ்வதற்குக்கூட தகுதியற்றுப் போய்விட்ட சூழலில், இதுபற்றி எவ்வித அக்கறையும் செலுத்தாமல், 'அடைந்தால் தனிநாடு, இல்லையேல் சுடுகாடு' என, இலங்கைத் தமிழர்கள் வெற்றுக்கூச்சல் போடுவதால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை.

இன்று இலங்கைத் தமிழர்களின் கலாச்சாரம் என்றால், அது தென்னிந்திய நாலாம் தர குப்பைச் சினிமாவைத் தவிர வேறொன்றும் இல்லை என்ற அளவுக்கு, உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழர்கள் வாழ்கின்றனர். இன்று புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழர்களின் பொருளாதார பலத்தை எடை போட்டால், அவர்களால் இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளின் பொருளாதாரத்தையும், கலாச்சாரத்தையும் உச்ச நிலைக்குக் கட்டியெழுப்ப முடியும். ஆனால் தென்னிந்திய பட முதலாளிகளுடன் சேர்ந்து லாப நோக்கில் கோடி கோடியாக முதலீடு செய்யும் இந்த புலம்பெயர் புலித் தமிழர்கள், தமது தாய் மண்ணின் வாசனையைப் பறைசாற்றும் ஏதாவது திரைப்படங்கள் எடுக்க இதுவரை முயன்றிருக்கிறார்களா?

ஆனால் ஏதோவொரு வகையில் தமிழ் பற்றும், நாட்டுப்பற்றும் கொண்ட சிலர் தமது ஆவலினாலும் முயற்சிகளினாலும் 1960களிலிருந்து இனவாதப் போர் தொடங்கிய 1983 வரையான காலகட்டம் வரை ஒருசில திரைப்படங்களையாவது பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இலங்கையில் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றுக்குக்கூட அன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களுக்குத் தலைமைதாங்கிய தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள் எவ்வித ஆதரவும் வழங்கியது கிடையாது. அவர்கள் அப்பொழுதெல்லாம் எதற்கெடுத்தாலும் 'இந்தியா எங்கள் தாய்நாடு' என்ற பிரமையில் மூழ்கிக் கிடந்தார்கள்.

அவர்களைத்தான் விடுவோம். தமிழ் பொதுமக்கள் கூட உள்ளூர் படத் தயாரிப்பாளர்களுக்கோ, எழுத்தாளர்களுக்கோ இதர பிற கலைஞர்களுக்கோ போதிய ஆதரவு தரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இன்றும்கூட அவர்கள் அரசியலில் பல கசப்பான பாடங்களைப் படித்த பின்னர்கூட, தமது அவலங்களுக்கெல்லாம் யார் காரணமோ, அந்த தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு முடிசூட்டுவதிலேயே முன்நிற்கிறார்கள். இதைப் பார்க்கும்

"மலையகச் சூழலில் இன்று தமிழக சினிமாவினால் இளைய சமூகம் தன்னிலையை இழந்துள்ளது. குறுந்தகட்டில் பெருமளவில் வீடுகளில் சினிமா புசிக்கப்படுகின்றது. எவ்விதமான ரசனை, பிரக்ஞை ஏதுமற்று தமிழ்நாடு என்கிற மாயையில் சினிமா உறிஞ்சிக் குடிக்கப்படுகின்றது. வாழ்நிலையில், கலாச்சார, ஒழுக்க, விழுமியங்களில் சினிமா துஷ்பிரயோகம் செய்தபடி ,இருக்கின்றது. இன்று சக்தி TVயில், சன் TVயில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நாடகங்கள் நம் வீடுகளில் பெரும் தலை சுற்றலாக இருக்கின்றது. இதை எப்படிக் கட்டுப்படுத்துவதென்று தெரியவில்லை."

**- திரைப்படங்கள் குறித்துத் தீவிரமாக எழுதிவரும் மாரி மகேந்திரன், நுவரெலியா**

போதெல்லாம் முன்னைய காலங்களில் சொன்ன, 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பதை மாற்றி, 'குடிகள் எவ்வழி அரசன் அவ்வழி' என்று புதுமொழி சொல்ல வேண்டும் போல் இருக்கிறது.

இலங்கைத் தமிழ் சினிமாவில் அக்கறையுள்ள ஒரு சொற்ப பிரிவினருக்குத்தன்னும் பயன்படும் என்பதற்காக இலங்கையில் தயாரான தமிழ் படங்களின் பட்டியல் ஒன்றைக் கீழே தந்திருக்கின்றேன்.

| | படத்தின் பெயர் | வெளிவந்த ஆண்டு |
|---|---|---|
| 1 | சமுதாயம் | 1962 |
| 2 | தோட்டக்காரி | 1963 |
| 3 | கடமையின் எல்லை | 1966 |
| 4 | பாசநிலா | 1966 |
| 5 | டாக்சி டிரைவர் | 1966 |
| 6 | நிர்மலா | 1968 |
| 7 | மஞ்சள் குங்குமம் | 1970 |
| 8 | வெண்சங்கு | 1970 |
| 9 | குத்துவிளக்கு | 1972 |
| 10 | மீனவப் பெண் | 1973 |
| 11 | புதிய காற்று | 1975 |
| 12 | கோமாளிகள் | 1976 |
| 13 | பொன்மணி | 1977 |
| 14 | காத்திருப்பேன் உனக்காக | 1977 |
| 15 | நான் உங்கள் தோழன் | 1978 |
| 16 | வாடைக்காற்று | 1978 |
| 17 | தென்றலும் புயலும் | 1978 |
| 18 | தெய்வம் தந்த வீடு | 1978 |
| 19 | ஏமாளிகள் | 1978 |
| 20 | அனுராகம் | 1978 |
| 21 | எங்களில் ஒருவன் | 1979 |
| 22 | மாமியார் வீடு | 1979 |
| 23 | நெஞ்சுக்கு நீதி | 1980 |
| 24 | இரத்தத்தின் இரத்தமே | 1980 |
| 25 | அவள் ஒரு ஜீவ நதி | 1980 |
| 26 | நாடு போற்ற வாழ்க | 1981 |
| 27 | பாதை மாறிய பருவங்கள் | 1982 |
| 28 | சாமிலாவின் இதயராகம் | 1993 |

சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழி மாற்றம் பெற்ற படங்கள்

| | படத்தின் பெயர் | வெளிவந்த ஆண்டு |
|---|---|---|
| 1 | கலியுக காலம் | 1974 |
| 2 | நான்கு லட்சம் | 1975 |
| 3 | யார் அவள்? | 1976 |
| 4 | சுமதி எங்கே? | 1976 |
| 5 | ஒரு தலைக்காதல் | 1980 |
| 6 | பனி மலர்கள் | 1981 |
| 7 | இவளும் ஒரு பெண் | 1981 |
| 8 | அஜாசத்த | 1982 |

இதேவேளை வெற்றிபெற்ற பல சிங்களப் படங்களை ரொபின் தம்பு போன்ற தமிழர்களே தயாரித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் தமிழ்ப் படங்களைத் தயாரிக்க முன்வராமைக்கு தமிழ் அரசியல் தலைமைகளும் தமிழ் மக்களும் ஆதரவு வழங்காமையே காரணம் என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். *

# ஐயகோ வைகோ... இன்னமுமா நீங்கள்...!?

கேள்வி: 'விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இன்னமும் உயிருடன் இருக்கிறார்' என்று ஆனந்தவிகடன் கேள்வி - பதில் பகுதியில் வைகோ உறுதியாகக் கூறியுள்ளாரரே! அவர் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறாரா அல்லது தமிழக மக்களை ஏமாற்றுகிறாரா?

பதில் – ஹிட்லர் இறந்த பிறகு, பல ஆண்டுகள் அவர் உயிருடன் இருப்பதாகவே பலர் கூறினர். 'ஹிட்லர் உடல் அவரது உடலே அல்ல' என்று அவர்கள் வாதிட்டனர். அதுபோல்தான் இது. உண்மையை எதிர்கொள்ள அஞ்சுபவர்களின் இயல்பு இது.

நன்றி: 'துக்ளக்' கேள்வி – பதில்

# சுவைக்கவும் ரசிக்கவும்!

பெரியகுளம் படப்பிடிப்பு இடத்துக்குப் போனதுமே காரவானுக்குள் நுழைந்தேன். ஆர்யா முகமெங்கும் தாடியுடன் நரசிம்மம் போல அமர்ந்து மடிக்கணினியில் ஏதோ தட்டிக்கொண்டிருந்தார்.....அருகே ஒரு கருப்பான பெண் உட்கார்ந்திருக்க "இவளைப் பாத்தீங்கள்ல? இந்த உருவத்துக்குள்ள பூஜா இருக்கா" என்றார்.

உண்மையிலேயே பூஜாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இத்தனை சின்னப்பெண் என்று நான் எதிர்பார்க்கவில்லை. **ஓரம்போவில்** புடவையெல்லாம் கட்டி உயரமாக இருந்தது போலிருந்தது. "கொடுமை பண்ணிட்டார் பாலா" என்றேன். "வால்க்கையிலே ஏதாவது ஸிரப்பா பன்னனும் இல்ல ஐயா? நெடிக்க வெந்தாச்சு.." என்றார் பூஜா. ....சமீபத்தில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் "யனது புக்கைப்படம்" என்று சொல்லப்போய் நிகழ்ச்சி தொகுப்பாளினி விழி பிதுங்கியதை ஆர்யா சொன்னார்.

'நான் கடவுள்' படப்பிடிப்பு காட்சியொன்றின் போது தமக்கு ஏற்பட்ட அனுபவம் பற்றி, தனது 'இன்று பெற்றவை' என்ற நாட்குறிப்பு நூலில் எழுத்தாளர் ஜெயமோகன் இப்படி எழுதியிருக்கிறார். *

# இந்தியா-சீனா புஜ பலங்கள்!

**– வைத்தி**

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஒரு பனிப்போர் நிலவுவதாகவும், அது எதிர்காலத்தில் ஒரு நேரடிப் போராக மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும், மேற்கத்தைய முதலாளித்துவ ஊடகங்களும், இந்தியாவிலுள்ள பாரம்பரிய சீன – எதிர்ப்பு சக்திகளும் தொடர்ச்சியாகப் பிரச்சாரம் செய்து வருகின்றன. இந்த கோஸ்டி கானத்தில், எப்பொழுதும் உலகிலுள்ள கூடாதவற்றைத் தேடிப்பிடித்து வாத்தியக் கச்சேரி நடாத்தும் புலிசார்பு ஊடகங்களும் பங்குபற்றுவதும், அதில் இலங்கை அரசை சீனா சார்பாக அடையாளப்படுத்துவதும் வாடிக்கையாகிவிட்டது.

இன்னும் சிலர் கற்பனைக் குதிரையை கட்டுக்கடங்காமல் தட்டிவிட்டு, சீனா இந்தியாவைத் தாக்கினால் இந்தியா தகுந்த பதிலடி கொடுக்கும் என்றும் பெருமிதம் பேசி வருகின்றனர். இந்தப் பனிப்போர், நேரடிப்போர், தகுந்த பதிலடி எல்லாம் சில உள்நோக்கம் கொண்ட அரசியல் சக்திகளாலும், ஊடக மாபியாக்களாலும் கிளப்பி வரும் பூச்சாண்டிகள் என்பது, இந்திய அரச தலைவர்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும் என்ற போதிலும், அவர்களும் சில தேவைகளுக்காக இதுபற்றி மௌனம் காத்து வருகின்றனர்.

ஆனால் இராணுவ பலத்திலும், ஏனைய விடயங்களிலும் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாரிய இடைவெளியை விளங்கிக் கொள்வதற்கு அண்மையில் 'ஆனந்த விகடன்' இதழ் தந்த பின்வரும் விபரங்கள் பயன்மிக்கதாக இருக்கும். அவை வருமாறு:

| | சீனா | இந்தியா |
|---|---|---|
| இராணுவம் | 22.85 லட்சம் | 13.25 லட்சம் |
| போர்க்கப்பல் | 309 | 66 |
| போர் விமானம் | 1200 | 100 |
| சராசரி ஆயுள் | 73,5 ஆண்டு | 64,4 ஆண்டு |
| கல்வியறிவு | 94 % | 63 % |
| குழந்தைகளுக்கு தடுப்பூசி | 97 % | 66 % |
| உயர்கல்விக்கு செல்வோர் | 25 % | 13 % |
| ஹெக்டருக்கு விவசாய உற்பத்தி | 10,500 கிலோ | 2,203 கிலோ |

இதுதவிர நாட்டின் மொத்த தானிய உற்பத்தி இந்தியாவைக் காட்டிலும் சீனாவில் 4 மடங்கு அதிகம். 2009ல் ஒரு சராசரி இந்தியனின் ஆண்டு வருமானம் 3200 அமெரிக்க டொலர்கள். சீனா இதை 10 ஆண்டுகளுக்கு முன்பே எட்டிவிட்டது. சீனா கடந்த 30 ஆண்டுகளில் தனது மக்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்தோர் தொகையை 64 வீதத்திலிருந்து 10 வீதமாகக் குறைத்துள்ளது. இது எந்த நாட்டிலும் ஈட்டப்படாதது.

இந்த நிலைமையில் இந்தியப் பாதுகாப்புத்துறை 4 ஆயிரம் கோடி ரூபாவிற்கு இஸ்ரேலிடம் 'அவாக்ஸ்' போர் விமானங்களை வாங்குவதற்கு ஒப்புதல் கேட்டுள்ளது.

எத்தனை கோடிக்கு இந்தியா ஆயுதங்களை வாங்கிக் குவித்தாலும் இரண்டு உண்மைகள் யதார்த்தமானவை. ஒன்று மக்கள் நலனை முன்னிறுத்துகின்ற சோசலிச நாடான சீனா, தன்னைப்போல சனத்தொகை கூடியதும் அதிலும் 90 வீதத்துக்கு மேலான மக்கள் வறுமையில் உழல்வதுமான ஒரு நாட்டிற்கு எதிராக வலிந்து போர் புரிவதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை.

அப்படியில்லாமல் ஏகாதிபத்திய சக்திகளினால் ஒரு போர் திட்டமிட்டு உருவாக்கப்பட்டாலும், சீனாவை நெருங்குவதற்கே இந்தியாவால் முடியாது இருக்கும்.

*

## பொன் மொழியும் பித்தளை மொழியும்

"மற்றவர்களின் பொன்மொழிகளைப் பிதற்றித் திரிவதைவிட, உன் பித்தளை மொழிகளை இயற்றுவதே மேல்"

**– கம்யூனிஸ்ட் மு.கார்த்திகேசன் ஒரு எழுத்தாளருக்குக் கூறிய அறிவுரை**


ஆயிரம் வெட்டுக்காயங்கள் பட்டும் இறக்க அஞ்சாதவன், சக்கரவர்த்தியைக் குதிரையிலிருந்து வீழ்த்தத் துணிவான்

**– ஒரு சீனப் பழமொழி**

மரம் ஓய்வை விரும்பினாலும், காற்று ஒருபோதும் அதற்கு அனுமதிப்பதில்லை.

**– ஒரு சீனப் பழமொழி**

# சினிமா பற்றி மாபெரும் ரஸ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய்



*சினிமாவின் தோற்றத்தில் ரஸ்யாவுக்கு ஒரு முன்னோடி பங்களிப்பு உண்டு. அந்த சினிமா உருவான காலத்தில் உலகப் புகழ் பெற்ற ரஸ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய் (1828 – 1910) அவர்களிடம் அதுபற்றி கருத்து கேட்கப்பட்டது. அதற்கு அவர் பின்வருமாறு கருத்துக் கூறியுள்ளார்:*

*"இது ஒரு புதிய கலை வடிவம். எதிர்காலத்தில் எழுத்தாளர்களுக்கு இந்த வடிவம் பெரிய நெருக்கடியை உருவாக்கப் போகிறது. இந்த நிழற்கலைக்கான எழுத்து ஒன்று அவசியமானது. ஆனால் அது இப்போது நம்மிடம் இல்லை. நானே கூட அதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றேன். மரபான கலைகளுக்கு இந்தப் புதிய கலை வடிவம் பெரிய சவாலாக மாறப்போகிறது. காண்கலையில் இது ஒரு புரட்சி என்றே நினைக்கின்றேன்."*

*பின்னர் சினிமாக் கலை வணிகர்களின் கைகளில் சிக்கிக்கொண்ட சூழ் நிலையில் வருத்தப்பட்டு பின்வருமாறு கருத்துக் கூறியுள்ளார்:*

*"அப்படி ஒரு சூழல் (வணிகர்களிடம் சிக்கும் - எமது குறிப்பு) உருவாகுமானால், சினிமா என்பதில் உள்ள கலையம்சம் அழிந்து போகத் தொடங்கி விடும். ஒருவகையில் அது கலையின் வீழ்ச்சியே.*

*ஒரு சிறிய வண்ணத்துப் பூச்சியொன்று அங்குமிங்கும் தன் அழகைக் காட்டியபடியே நீர்நிலை ஒன்றின் மீது பறக்கிறது. பூவில் தேன் குடிக்கிறது. அப்போது ஒரு பருத்த தவளையொன்று அதைப் பார்த்தபடியே நிற்கிறது. வண்ணத்துப்பூச்சி சிறகசைத்தபடியே சூரியனைக் கண்டு துள்ளுகிறது. தவளை தன் வாயை அகலமாகத் திறந்து வைத்துக் கொண்டது. வண்ணத்துப்பூச்சி தானே பறந்து போய் அந்த தவளையின் வாயினுள் சென்றுவிட்டது. தவளை எதுவும் நடக்காதது போல தன் வாயை மூடிக்கொண்டு வண்ணத்துப்பூச்சியை விழுங்கிவிட்டது. அப்படித்தான் வணிகர்கள் கையில் சிக்கிய சினிமாவும்.*

*ஆனால் இங்கே இன்னொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். வயிற்றில் சிக்கிய வண்ணத்துப்பூச்சி கழிவாக வெளியேறும். அந்தக் கழிவிலிருந்த வண்ணத்துப்பூச்சியின் முட்டையிலிருந்து ஒரு லார்வா பிறக்கும். அது வளர்ந்து வண்ணத்துப்பூச்சியாகும். மீண்டும் அந்த வண்ணத்துப்பூச்சி சூரியனுக்கு அழகு காட்டியபடியே இன்னொரு தவளை வாய் திறந்துகொண்டு அதற்கும் காத்திருக்கும் என்பதைப் பற்றிய கவலையின்றிப் பறக்கத் தொடங்கும்.*

*இப்படி அழிவிலிருந்து திரும்பவும் தன்னை உயிர்ப்பித்துக் கொள்வதற்கு கலை வடிவமான சினிமாவுக்குத் தெரியும்."*

*(100 வருடங்களுக்கு முன்பே பேரிலக்கியவாதி டால்ஸ்டாய், எவ்வளவு தீர்க்கதரிசனத்துடன் இன்றைய சினிமா (குறிப்பாக தமிழ் சினிமா) வந்தடைந்துள்ள நிலையை விவரித்துள்ளார் என்பதைப் பார்க்கும் போது, வியப்புத்தான் மேலிடுகிறது. டால்ஸ்டாய் 1917ம் ஆண்டு மாபெரும் ரஸ்ய சோசலிசப் புரட்சியின் தளகர்த்தர் மாமேதை லெனினிதும், இந்திய சுதந்திர பிதா காந்தியினதும் பெரும் விருப்பத்துக்கும் மரியாதைக்கும் உரிய எழுத்தாளர் என்பது குறிப்பிடத்தக்கது)*

*

---

### மனசு

ரோஜாவை போல் நான்
அழகும் இல்லை...
ஆனால்....
என் மனசு ரோஜாவை போல்
அழகானது..!

– ஏ.கே. றீகன் (நன்றி: எழுத்து)

## வாசகர் கேள்வியும் பதிலும்

# தமிழ் மக்களுக்குத் தேவை அதிகாரப் பரவலாக்கலா அல்லது அதிகாரப் பகிர்வா?

**கேள்வி:** *இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் பற்றிக் குறிப்பிடும் சில ஊடகங்களும் அரசியல்வாதிகளும், சில சந்தர்ப்பங்களில் 'அதிகார பரவலாக்கத்துக்கான பேச்சுவார்த்தை' என்றும், வேறு சில சந்தர்பபங்களில் 'அதிகாரப் பகிர்வுக்கான பேச்சுவார்த்தை' என்றும் குறிப்பிடுகின்றனர். இதில் எது சரியான பதம்?*

***பொ.காசிநாதன், மெல்போர்ன், அவுஸ்திரேலியா***

**பதில்:** *'அதிகாரப் பகிர்வுக்கான'* (Devolution of Powers) *என்ற பதமே சரியானது. ஏனெனில் இதன் பொருள், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியிடமும் மத்திய அரசாங்கத்திடமும் குவிந்துள்ள அளவுக்கதிகமான அதிகாரங்களை, மாகாண அல்லது பிராந்திய அதிகார அலகுகளுக்குப் பங்கிட்டு அளிப்பது என்பதாகும். இதன் மூலம் இனத்துவ சிறுபான்மை மக்கள் மற்றும் பின்தங்கிய பிரதேச மக்களுக்கு அதிகாரத்தில் பங்கு வழங்கி, ஆட்சி அதிகாரத்திலும் அபிவிருத்திப் பணிகளிலும் அவர்களையும் பங்காளிகளாக்குவதாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட இனம், வர்க்கம், ஆதிக்க சக்திகள் என்பவற்றிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை ஜனநாயக ரீதியில் மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதாகும்.*

*இதற்கு உதாரணமாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூன்று முயற்சிக்களைக் குறிப்பிடலாம். முதலாவது முயற்சி, 1957ல் அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவுக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட 'பண்டா – செல்வா உடன்படிக்கை' ஆகும். இதன்படி வடக்கிலும் கிழக்கிலும் பிராந்திய சபைகள் அமைக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு அதிகாரங்கள் பங்கிடப்பட இருந்தது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கெதிராக பௌத்த பிக்குமாரைத் தூண்டிவிட்டுக் குழப்பம் விளைவித்ததால், அது நடைமுறைக்கு வராமல் போய்விட்டது.*

*இரண்டாவது முயற்சி, இனப்பிரச்சனையை மையமாக வைத்து உள்நாட்டு யுத்தம் நடைபெற்று வந்த சூழ்நிலையில், 1987ல் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட 'இந்திய - இலங்கை உடன்படிக்கை' ஆகும். இந்த ஒப்பந்தப்படி வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டு, அந்த மாகாணசபைக்கு கணிசமான அதிகாரங்கள் பகிரப்பட்டதுடன், அதே அதிகாரங்கள் இலங்கையின் ஏனைய 7 மாகாண சபைகளுக்கும் வழங்கப்படவிருந்தன. ஆனால் ஒப்பந்தம் எழுதப்பட்ட போது அதை எதிர்த்த, அதே ஐ.தே.கவின் பிரதமர் ஆர்.பிரேமதாச, 1990ல் தான் ஜனாதிபதி ஆனதும், அந்த ஒப்பந்தத்தை தமது தனிநாட்டு நோக்கங்களுக்காக எதிர்த்த இன்னொரு பகுதியினரான விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து, வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைத்ததின் மூலம் இல்லாமல் செய்துவிட்டார்.*

*மூன்றாவது முயற்சி, திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில், 2000ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் அவரது அரசால் கொண்டு வரப்பட்ட 'தீர்வப் பொதி' ஆகும். இந்தத் தீர்வுத் திட்டத்தின்படி, இலங்கையில் நடைமுறையிலிருக்கும் ஒற்றையாட்சி முறை நீக்கப்பட்டு, இலங்கை சமஸ்டித் தன்மை வாய்ந்த 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என மாற்றப்பட இருந்தது. அதன்படி தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்குப் பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே பிராந்திய அலகாக நிர்வகிக்கப்பட இருந்ததுடன், பிராந்தியங்களுக்கு முன்னைய இரு தீர்வத் திட்டங்களையும் விட கூடுதலான அதிகாரங்களும் பங்கிடப்படவிருந்தன. ஆனால் இதையும் ஐ.தே.க நிறைவேற்றவிடாமல் பார்த்துக் கொண்டது. ஐ.தே.கவின் முறியடிப்பு முயற்சிக்கு உதவியாக அன்றைய பாராளுமன்றத்தில் புலிகளின் பினாமியாகச் செயப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சிங்கள இனவாத கட்சிகளான ஜே.வி.பி, ஜாதிய ஹெல உறுமய என்பன செயல்பட்டன.*

*எனவே மூன்று முறை முயற்சிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு முயற்சிகளையும் நிறைவேற்ற விடாமல் ஐ.தே.க தான் செயற்பட்டது என்பதும், அதற்கு ஆதரவாக அதிகார வெறியும், பிற்போக்கு முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.கவுடன் வர்க்க உறவும் கொண்டிருந்த தமிழ் தலைமைகள்*

ஆதரவாக இருந்துள்ளன என்பதும் ஒளிவு மறைவற்ற உண்மைகளாகும்.

மறுபக்கத்தில், ஐ.தே.க அரசுகளும் தமிழ் தலைமைகளும் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்த சில உடன்படிக்கைகளும் உள்ளன. ஒன்று, 1965ல் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்த டட்லி சேனநாயக்கவைப் பிரதமராகக் கொண்ட ஐ.தே.க அரசு தமிழரசுக் கட்சியுடன் செய்து கொண்ட 'மாவட்ட சபைகள்' அமைப்பதற்கான 'டட்லி – செல்வா உடன்படிக்கை' ஆகும். எந்தவித அதிகாரங்களும் அற்ற அந்தச் சபைகளைக்கூட அந்த அரசாங்கம் கடைசிவரை நிறைவேற்றவே இல்லை.

இரண்டாவது, 1977ல் பெரும் வெற்றியுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க அரசு, 1978ல் அன்று எதிர்க்கட்சியாகவிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி கொண்டு வந்த 'மாவட்ட அபிவிருத்திச் சபைகள்' சட்ட மூலம் ஆகும். அதையும்கூட அந்த அரசு நடைமுறைப்படுத்தவில்லை. மாறாக 'பிரிவினைவாத எதிர்ப்பு சட்ட மூலம்' என்ற ஒன்றைக் கொண்டு வந்து, த.வி.கூ பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றத்திலிருந்தும் வெளியேற்றிய கைங்கரியத்தைத்தான் செய்தது.

ஐ.தே.க அரசுகள் கொண்டு வந்த இந்த இரண்டு திட்டங்களும் உண்மையில் அதிகாரப் பகிர்வுத் திட்டங்கள் அல்ல. அவை 'அதிகாரப் பரவலாக்கல்' (Decentralization of Powers) திட்டங்களாகும். குறிப்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு கொண்டு வந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் திட்டம், அவர் தனது நிறைவேற்று அதிகாரத்தை மாவட்ட மட்டங்களுக்கு பரவல்படுத்தி, நாட்டின் எல்லாப் பகுதிகளையும் தனது இரும்புப் பிடிக்குள் கொண்டு வருவதற்காகக் கொண்டு வரப்பட்டதாகும்.

உண்மையில், இலங்கையில் இனப்பிரச்சினைக்கோ அல்லது கிராமப்புற மக்களின் பிரச்சினைகளுக்கோ தீர்வு காண்பதாக இருந்தால், அதிகாரங்களைப் பிராந்தியங்களுக்கு பங்கிட்டளிப்பது ஒன்றே ஒரே வழியாகும். அதற்கு தற்போதைய சூழ்நிலையில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவான 13வது திருத்தச் சட்டமே சிறந்த வழிமுறையாகும். 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கட்டுள்ள மாகாண சபைகள் முழுமையாகச் செயல்படுமாக இருந்தால், அது வடக்கு கிழக்கில் வாழுகின்ற சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக அமைவதுடன், நாட்டின் ஏனைய மாகாண மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும்.

இப்பொழுது நடைபெறுகின்ற அரசு தமிழ் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைள் அதை மையப்படுத்தியே நடைபெறுகின்றன. ஆனால் கடந்தகால அனுபவங்களை எடுத்துப் பார்க்கையில், இந்தப் பேச்சுவார்த்தையையும் ஐ.தே.க குழப்பாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. இப்பொழுது மக்களையும் சர்தேச சமூகத்தையும் ஏமாற்றுவதற்காக, 'தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள்' என்று சொல்லும் ஐ.தே.க, 'வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைப்பது' நிச்சயம்.

மறுபக்கத்தில் தமிழ் தலைமைகளின் கடந்தகால வரலாற்றை எடுத்துப் பார்க்கையில், தற்பொழுது அரசாங்கத்துடன் அதிகாரப் பகிர்வு குறித்து பேச்சுவார்த்தை நடாத்தி வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, பொறுத்த நேரத்தில் ஐ.தே.கவுடன் கைகோர்த்து அதைக் குழப்பாது என்பதற்கும் எவ்வித உத்தரவாதமும் இல்லை.

எனவே தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வலியுறுத்துவோரும், அதை வழங்க வேண்டிய பொறுப்பிலிருக்கும் அரசாங்கமும், இந்த உண்மைகளைக் கணக்கில் எடுப்பது அவசியம்.

(கடந்த காலங்களில் 'வானவில்' வாசகர்களில் சிலர் எம்மிடம் சில கேள்விகளை எழுப்பியுள்ளனர். அந்தக் கேள்விகளில் உள்ள முக்கியத்துவம் கருதி, சில கேள்விகளுக்கு இயலுமான வரை தொடர்ந்து பதிலளிக்க எண்ணியுள்ளோம். முதலாவது கேள்விக்கான பதிலே இது – ஆசிரியர் குழு)

## கல்வியின் எல்லை செயல்பாடே

கற்க கசடற, கற்றவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக.
- திருவள்ளுவர்

கல்வியின் நோக்கம் வெறும் அறிவைப் பெறுதலல்ல, செயல்பாடே முக்கியம்.
- சுவாமி விவேகானந்தர்

வாழ்க்கையின் கடைசி எல்லை அறிவல்ல, செயற்பாடே.
- தோமஸ் ஹக்ஸ்லி

கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் (வட கொரியா) தலைவர் கிம் ஜோங் இல் அவர்கள் 2011 டிசம்பர் 17ஆம் திகதி திடீரென ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக காலமான செய்தி, அந்த நாட்டு மக்களை ஆறாத்துயரத்திலும், மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளை களிப்பிலும் ஆழ்த்தியதை பல்வேறு ஊடகத் தகவல்களுக்கூடாக அவதானிக்க முடிந்தது.

அண்மைக் காலங்களில் சில அரபு மற்றும் ஆபிரிக்க நாடுகளில் நீண்டகால சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிராக ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சிகளாலும், சில நாடுகளில் மேற்கத்தைய சக்திகளுக்குப் பிடிக்காத ஆட்சியாளர்களை இராணுவ நடவடிக்கைகள் மூலமும் அகற்றியதை வைத்துக் கொண்டும், அதை மற்றைய நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் செய்வதற்குப் பொருத்திப் பார்ப்பது ஒரு வழக்கமாகிப் போய்விட்டது. எனவே வட கொரியாவிலும் கிம்மின் மரணத்தைத் தொடர்ந்து அவ்வாறான ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படும் என முதலாளித்துவ ஊடகங்கள் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டன.

எனவே தமது பிரச்சாரங்களை நியாயப்படுத்துவதற்காக மக்கள் வெளிப்படுத்திய துயரம் செயற்கையாக உருவாக்கப்பட்டது என்றும், பயத்தினால் உருவானது என்றும் மேலதிக பொய்ப்பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டன. சில மேற்கத்தைய ஊடகங்கள் 'ஐயோ, ஈராக்கிலும், எகிப்திலும், லிபியாவிலும் வந்தது போல வட கொரியாவில் ஆட்சி மாற்றம் வரவில்லையே' என்று கூறி வயித்தெரிச்சலைக் கொட்டிக் கொண்டன.

ஆனால் வட கொரியாவின் புரட்சிகர வரலாற்றை அறிந்தவர்களுக்குத்தான், கிம் இறந்தபோது ஏன் மக்கள் கதறியழுதார்கள், அவரது மரணத்தின் பின்னர் ஏன் அங்கு ஆட்சி மாற்றம் ஏற்படவில்லை என்பது புரியும். வட கொரியா என்பது, இந்தச் சக்திகள் கற்பனை பண்ணுவது போல ஒரு கடற்கரை மணல்வீடு அல்ல. அது கொரிய மக்களின் இரத்தத்தையும் சதையையும் கொண்டு கட்டி எழுப்பப்பட்ட எஃகு மாளிகை. தற்போது காலமான கிம்மின் தந்தையார் கிம் இல் சுங்

# கிம்மின் மரணத்தின் பின்னர் வட கொரியாவில் மாற்றத்தை எதிர்பார்க்கும் மேற்குலகம்!

மிக நீண்ட காலமாகவே வட கொரியாவைப் பற்றி மிகவும் மோசமான ஒரு சித்திரத்தையே உலக மக்களுக்கு - குறிப்பாக மேற்கு நாடுகளின் மக்களுக்கு சர்வதேச ஊடகங்கள் வழங்கி வந்துள்ளன. வட கொரியா ஒரு தனிநபர் சர்வாதிகார நாடு, போக்கிரி நாடு, சர்வதேச விதிமுறைகளை மதிக்காத நாடு, வறுமையின் கோரப்பிடியில் சிக்கியுள்ள நாடு எனப் பல்வேறு வகையான பிரச்சாரங்கள் அந்நாடு குறித்து செய்யப்பட்டு வந்துள்ளன. அதன் மூலம் வட கொரியாவின் தற்போதைய சோசலிச அரசாங்கம் தூக்கியெறியப்பட வேண்டும் என்ற கருத்தை, முதலாளித்துவ ஊடகங்கள் உருவாக்கி வந்துள்ளன.

எனவே வட கொரியத் தலைவர் கிம் காலமானதும், அங்கு மக்கள் கிளர்ச்சி வரலாம், அதன் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்படலாம் என அந்த ஊடகங்கள் எதிர்வு கூறின. அத்துடன் கிம் திடீரென மரணித்ததால், அவரது இடத்துக்கு வந்த அவரது 'முதிர்ச்சி அடையாத' மகனான கிம் ஜோங் அன் ஆட்சியைக் கொண்டு நடாத்த லாயக்கற்றவர் எனவும் பிரச்சாரம் செய்தன. ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது போலில்லாமல், கிம்மின் மரணத்தைக் கேட்டு வட கொரிய மக்கள் கதறியழுத காட்சிகள் அவர்களைத் திகைக்க வைத்ததுடன், ஆட்சி அதிகாரத்திலும் எந்தவித சலனமும் ஏற்படாதது, அவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துவிட்டது.



அவர்களால் (அவர் 1994ல் மரணித்தார்) யப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போரில் 1940களின் மத்தியில் சுதந்திரமாக உருவாக்கப்பட்ட நாடு அது.

அதன்பின்னர் அங்கு கொரிய தொழிலாளர் கட்சியின் தலைமையில் சோசலிச அரசு ஸ்தாபிக்கப்பட்டது. அதைப் பொறுக்காத ஏகாதிபத்திய சக்திகள் 1950ல் அந்நாட்டின் மீது அமெரிக்கா தலைமையில் போர்

தொடுத்தன. அந்தப் போர் இரண்டு ஆண்டுகள் வரை நீடித்தது. பல இலட்சம் கொரிய மக்கள் ஏகாதிபத்தியத்திடமிருந்து தமது தாய்நாட்டைப் பாதுகாக்கும் போரில் வீர மரணம் அடைந்தார்கள். அந்தப் புனிதப் போரில் ஒரு வருடத்துக்கு முன்னர்தான் விடுதலை அடைந்திருந்த சீனாவின் மக்களும் பங்குபற்றியதுடன், அதில் இரண்டு இலட்சம் சீனத் தொண்டர்கள் தம்மை வீரத்தியாகம் செய்தனர். அவர்களில் சீனப் பெரும் தலைவர் மாஓசேதுங் அவர்களின் மகனும் ஒருவராவார்.

அந்தப் போரில் ஏகாதிபத்தியவாதிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், அவர்கள் கொரியாவை வட கொரியா – தென் கொரியா எனப் பிரித்ததுடன், தென் கொரியாவில் தமது படைத்தளங்களை அமைத்து, வட கொரிய மக்களின் வாழ்க்கையை அச்சுறுத்திய வண்ணமே உள்ளனர். கொரிய மக்களின் பழைய ஆக்கிரமிப்பாளனான யப்பானும் வட கொரிய மக்களுக்கு எதிராகப் பல சீண்டுதல்களைச் செய்த வண்ணமே உள்ளது. அதன் காரணமாகவே வட கொரிய தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக பலம் வாய்ந்த இராணுவத்தைக் கட்டியெழுப்பியுள்ளதுடன், ஏவு கணைகளையும் தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தச் சூழல் உருவானது.

உண்மையில் கொரிய தீப கற்பத்தில் அமைதி நிலவ வேண்டுமானால், அங்கு நிலை கொண்டுள்ள சகல அந்நியப் படைகளும் வெளியேறுவதுடன், இரண்டு கொரியாக்களும் மீண்டும் இணைந்து வாழும் சூழலும் ஏற்பட வேண்டும். அது ஒன்றே அங்கு நிரந்தர சமாதானத்தைத் தோற்றுவிக்கும்.

**– சாரணியன்**

## குடும்பம் மற்றும் குழந்தைகள் பற்றி ஓஷோ

“குழந்தைகள் கம்யூனின் பொறுப்பில் வளர வேண்டியவாகள் குடும்பத்தின் பொறுப்பில் அல்ல. குழந்தைகளின் மனதில் எக்கச்சக்கமான பிரச்சினைகளை உண்டுபண்ணுவது குடும்பம்தான். மதம், அரசியல் போன்ற விடயங்களில் அவர்களுக்குள் ஏற்படும் முட்டாள்தனமான அணுகுமுறைக்கும், மூட நம்பிக்கைகளுக்கும், அவர்களுடைய உளவியல் சிக்கல்களுக்கும், நோய்க்கூறான தன்மைக்கும் குடும்பமே காரணம். குழந்தைகள் குடும்பங்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். ஒரு நவ மனிதனை நீங்கள் உருவாக்க வேண்டுமெனில், குடும்பம் என்பது ஒரு அசிங்கமான அமைப்பு. குடும்பத்தின் காலம் முடிந்துவிட்டது. குடும்பத்தின் இடத்தை கம்யூன் பிடித்தாக வேண்டும்.”

(பரிந்துரை - குடும்ப அமைப்பின் தோற்றத்தை மார்க்சிய கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ள விரும்புபவர்கள், மார்க்சிய மூலவர்களில் ஒருவரான பிரெடரிக் ஏங்கெல்ஸ் எழுதிய, ‘குடும்பம் - தனிச் சொத்து – அரசு ஆகியவற்றின் தோற்றம்’ என்ற நூலைப் படிப்பது பயனுள்ளதாக இருக்கும்)

## யப்பானில் சுனாமி அழித்த 20 மில்லியன் தொன் பொருட்கள் 2014ல் கனடிய – அமெரிக்க கரைகளைச் சென்றடையும்!

கடந்த வருடம் (2011) யப்பானை மிகப்பெரிய சுனாமி தாக்கியதை உலகமே பயத்துடனும் கவலையுடனும் அவதானித்தது. இயற்கையின் இந்தக் கோரத் தாக்குதலில் பல்லாயிரம் யப்பானிய மக்களின் உயிர்களும், கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த சொத்துக்களும் அழிவுக்குள்ளாயின. இதில் மிகப்பெரிய அதிர்ச்சியாக நவீன விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த யப்பானில், அதன் அணு உலைகள் சேதத்துக்குள்ளானமை உலகைக் கவலை கொள்ள வைத்தது.

இந்த அழிவிலிருந்து யப்பான் இப்பொழுது துரிதகதியில் மீண்டெழுந்து வருகின்றது. ஆனால் இந்த மாபெரும் அழிவின் போது ஆழிப்பேரலைகளால் அடித்து வாரிச்செல்லப்பட்ட பல்வேறு வகையான பொருட்கள், தமது பயணத்தைத் தொடர்ந்த வண்ணம் உள்ளன. அந்தப் பொருட்களின் மொத்த நிறை 20 மில்லியன் தொன்களாகும். அவை இப்பொழுது கனடாவினதும் அமெரிக்காவினதும் மேற்குக் கடற்கரைகளை நோக்கி நகர்ந்து வருகின்றன.

ஹாவாய் தீவிலுள்ள பல்கலைக்கழகமொன்றின் ஆய்வாளரான ஜான் ஹஃப்னர் (Jan Hafner) என்பவரின் கூற்றுப்படி, இப்பொருட்கள் 2014ல் கனடிய, அமெரிக்க கரைகளை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. “இது சம்பந்தமாக பீதியடையத் தேவையில்லை. இவை வருவதை முன்கூட்டியே அறிந்திருப்பது நல்லதுதானே?” என அவர் கூறியுள்ளார். இந்த சேதமடைந்த பொருட்கள் யப்பானிலிருந்து 3,200 மைல் கடலில் மிதந்து செல்வதை, ரஸ்ய பயிற்சிக் கப்பல் ஒன்று அவதானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

*பிறந்துள்ள 2012 புத்தாண்டில், அனைத்துத் தரப்பு மக்களும் தமது நியாயமான உரிமைப் போராட்டங்களில் மேலும் பல புதிய வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறோம்.*

*– வானவில்*

## இப்படியும் நடந்தது!

30 – 06 – 1997 ம் ஆண்டு தமிழ்நாட்டின் மதுரைக்கு அருகே உள்ள மேலவளவு என்ற ஊரில் இந்தச் சம்பவம் நடந்தது. அங்கு நடந்த ஒரு பஞ்சாயத்துத் தேர்தலில், உயர்சாதியினரின் மிரட்டலைப் பொருட்படுத்தாமல் முருகேசன் என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் போட்டியிட்டிருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்த உயர்சாதி வெறியர்கள் அவரைக் கதறக்கதற கண்டதுண்டமாக வெட்டிப் படுகொலை செய்துள்ளனர்! அவரை மட்டுமல்ல அவரோடு இருந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த அவரது 6 சகாக்களையும் வெட்டிச் சாய்த்துள்ளனர்!!

இதில் மிகவும் கொடூரம் என்னவெனில், முதலில் முருகேசனின் தலையைத் தனியாகத் துண்டித்த இந்தச் சாதி வெறி பிடித்த அரக்கர்கள், அவரது தலையிலிருந்து சொட்டிய இரத்தத்தை அவரது சகாக்களின் வாயில் பலவந்தமாகப் பருக்கி விட்டே, அந்த அறுவரையும் படுகொலை செய்துள்ளனர்.

முருகேசன் எப்படி ஈவிரக்கமற்று படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதைத் தெரிந்து கொள்ள, அவரது பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ள பின்வரும் வாக்கியங்களைப் படித்தால் புரிந்துகொள்ள முடியும்.

"தலை தனியாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் அந்தப் பிரேதம் காணப்பட்டது. கழுத்து எலும்பில் 5வது எலும்பு துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட பிரேதம், கழுத்துப் பகுதியில் உள்ள தசைகள், இரத்த நாளங்கள், நரம்புகள், உணவுக்குளாய், மூச்சுக்குளாய் மற்றும் தண்டுவடம் ஆகியவற்றில் வெட்டிய நிலையில் காணப்பட்டது"

(தீண்டாமையை எதிர்த்துத் தமது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்புடன் போராடிய காந்தி, அம்பேத்கார், பெரியார், அண்ணா ஆகியோரின் வழியில் அடி பிசகாது ஆட்சி நடாத்துவதாகப் பீற்றிக் கொள்ளும் இரண்டு திராவிடக் கழகங்களின் ஆட்சியில்தான் இத்தகைய வன்கொடுமைகள் நடைபெற்றுள்ளன. இன்றும்கூட நடந்து வருகின்றன!)

## தமிழகத்திலும் இலங்கையிலும் கண்ணகி பெருமையின் இறக்க ஏற்றங்கள்!

கடந்த நாலு வருடங்களில் ஒரு ஆண்டுகாலம் சிலப்பதிகாரம் குறித்த பயணமாகவே அலைந்தேன். பூம்புகார் துவங்கி கொடுங்கல்லூர் வரை ஆறு முறை பயணம் செய்து கண்ணகியின் வழித்தடம் மற்றும் சிலப்பதிகார நினைவுகளை ஆராய்ந்தேன்.

விசித்திரம் என்னவென்றால் தமிழகத்தில் கண்ணகிக்கு தனிக் கோவிலே கிடையாது. தமிழ்ப் பெண்மையின் அடையாளமாகக் காட்டப்படும் கண்ணகிக்கு சென்னைக் கடற்கரையில் உள்ள சிலை தவிர வேறு பெரிய சான்றுகள் எதுவுமில்லை.

ஒரே விதிவிலக்கு மதுரை சிம்மக்கல்லில் உள்ள செல்லத்தம்மன் கோவிலில் உள்ள கண்ணகி சிலை.....கண்ணகி கோட்டம் என்று அழைக்கப்படும் கேரளாவில் உள்ள மங்களதேவி கோவிலுக்குச் சென்றேன். அங்கே உள்ள சிலையில் இடுப்பின் கீழ்மட்டுமே உள்ளது. மேற்பகுதியை யாரோ உடைத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

தமிழ் நாட்டில் கண்ணகிக்கு உள்ள ஒரே சான்று மதுரையில் உள்ள சிலைதான். இலங்கையில் கண்ணகி வழிபாடும் கோவில்களும் இருக்கின்றன. இதுபற்றி பத்தினி தெய்வ வழிபாடு என்ற சிறந்த ஆய்வு நூல் வெளியாகி இருக்கின்றது. ஏன் தமிழகத்தில் கண்ணகி கோவில்கள் இல்லை என்பது இன்று வரை முழுமையாக ஆராயப்படவில்லை.

– எஸ்.ராமகிருஸ்ணனின் கட்டுரைத் தொகுப்பான, 'பேசத் தெரிந்த நிழல்' நூலிலிருந்து ஒரு பகுதி.

(திராவிட வாரிசுகளால் 'கண்ணகியா மாதவியா கற்பில் சிறந்தவள்?' என பகிரங்க மேடைகளிலும் சினிமா காட்சிகளிலும் பல்லாண்டுகளாக மயிர் பிளந்த விவாதம் நடாத்தப்படும் தமிழகத்தில், கண்ணகியின் உண்மை நிலை இதுதான்!)
*

## அன்னா ஹஸாரே?

"...இந்த அன்னா ஹஸாரே காந்தியவாதியாம். காந்திய வழியில் நடக்கிறவராம்!
காந்தி தனக்கு வந்த கடிதங்களின் பின்புறத்தாள் வெறுமையாக இருந்தால், அதைக்கூட வீணாக்காமல் குறிப்புகள் எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொண்டார். அந்த அளவுக்கு அவர் சிக்கனமாக இருந்தார். ஆனால் இந்த அன்னா ஹஸாரே இன்னோரா காரில் 'நானும் காந்தியவாதிதான்' என்று ஊரை ஏமாற்றிக்கொண்டு பயணிக்கிறார்.
சரத்பவாரை ஒரு சீக்கிய இளைஞன் அடித்தபோது, 'அவரை ஒரு அடிதான் அடித்தானா?' என்று கேட்கிறவர்தான் இந்தப் போலி காந்தியவாதி."
துர்வாசர் 'துக்ளக்' இதழில் எழுதிய ஒரு கட்டுரையில்

முன்பக்கத்தொடர்ச்சி...
பேச்சுவார்த்தையைத் தடம்புரள வைக்க முயற்சிக்கின்றனர். அதற்கு அனுசரணையாக தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்குச் சொந்தமான 'உதயன்' பத்திரிகை தினசரி செய்திகளை வெளியிட்டு, மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை விதைக்க முயல்கிறது.

அவர்களின் தீய நோக்கங்களுக்கு தூபம் போடும் வகையில் 'தமிழ் சிவில் சமூகம்' என்ற பெயரில், மன்னார் பேராயர் யோசப்பு ராயப்பு அவர்களது பெயரை முதல் கையெழுத்தாகக் கொண்டு அறிக்கையொன்று அண்மையில் வெளியிடப்பட்டது. மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்கள் பெற்று, தமிழ் – முஸ்லீம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகையில், மாகாணசபைக்கான தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றவே கூடாது என அந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது. அந்த அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கும் அரைவாசிக்கும் மேற்பட்டோர் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இனம் தெரியாத மர்ம நபர்களாக இருப்பதுடன், சாதாரண தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எதையும் எதிர் நோக்குபவர்களும் அல்லர். எனவே அவர்களுக்கு கடந்த காலத்தில் தமது தேவைகள் பலவற்றை அடைவதற்கு உதவிய யுத்த சூழல் ஒன்று திரும்பவும் ஏற்படுவதை வலியுறுத்தியே, அந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றின் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் உறுதியாகவுள்ளது. அரசின் அந்த நிலைப்பாடு யதார்த்தபூர்வமானதும், தந்திரோபாயம் மிக்கதுமாகும். ஏனெனில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குழப்பப்பட்டதிற்குக் காரணம், அந்த ஒப்பந்தங்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் ஒருமித்த அங்கீகாரம் இன்றி செய்யப்பட்டதாலேயே என்பது தெளிவானது. எல்லா ஒப்பந்தங்களையும் குழப்புவதில் ஐக்கிய தேசியக் கட்சி சூத்திரதாரியாகச் செயல்பட்டதுடன், ஜே.வி.பி, தமிழ் தலைமைகள் என்பனவும் அதற்கு ஒத்துழைத்துள்ளன.

எனவே கடந்த கால அனுபவங்களை வைத்துப் பார்க்கையில், தற்போதைய சூழலிலும் தீர்வு ஏதும் காண முற்பட்டால், ஐ.தே.க, ஜே.வி.பி என்பன குழப்பும் நிலையே காணப்படுகிறது. அதனால்தான் 'பாம்பின் காலை பாம்பறியும்' என்பது போல, ஐ.தே.கவுடன் கடந்த பல வருடங்களாகக் கூடிக்குலாவி அரசியல் செய்யும் மனோ கணேசன், ஐ.தே.க தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, கரு ஜெயசூரியா, சஜித் பிரேமதாச போன்றோர் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாகத் தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் எனக் கோரியுள்ளார் போலும்! மனோ கணேசனின் இந்த அறிக்கை ஐ.தே.க போட்டுள்ள அந்தரங்கத் திட்டங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது எனலாம்.

எனவேதான் அரசாங்கம் தனது பங்காளிக் கட்சிகள் உட்பட எதிர்க்கட்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிவெடுத்தது எனக் கருத வேண்டியுள்ளது. இதன் மூலம் தமிழ் மக்களின் நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்று தெரிய வாய்ப்புண்டு. எனவே அரசாங்கம் 60 வருட கால இனப்பிரச்சினைக்கு ஓரளவாவது ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைக் காண முயற்சிக்கையில், அந்தத் தீர்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உண்மையாக அக்கறையிருக்குமானால், அது தன் பிடிவாதப் போக்கைக் கைவிட்டு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து தன் பங்களிப்பைச் செலுத்துவது அவசியம்.

அதைவிடுத்து 'பிச்சைக்காரனின் புண்' போல இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏதும் ஏற்பட விடாமல், கடந்த காலங்களைப் போல அதைக் குழப்பியடிக்கும் ஐ.தே.கவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தந்திரோபாயக் கூட்டுச் சேருமாக இருந்தால், அது தமிழ் மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகமாகவே இருக்கும். கடந்த காலத் தமிழ் தலைவர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம், வே.பிரபாகரன் போன்றோர் ஆடிய தமிழ் மக்களுக்கு விரோதமான அதே கூத்தை இரா. சம்பந்தன் தலைமையும் ஆடப்போகின்றதா அல்லது ஆரோக்கியமாகச் செயல்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப் போகின்றதா என்பதை, தமிழ் மக்கள் உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள் என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை புரிந்து கொண்டால் சரி.

## *கண்ணீரில்*

*நான் தண்ணீரில் நடக்கும்*
*போது*
*உடனிருந்தவள்*
*இன்று*
*கண்ணீரில் நடக்கும்*
*போது*
*உடன் இல்லை..!*

– *ரேகா (நன்றி: எழுத்து)*

# தரும ஸ்தாபன அந்தஸ்தை இழந்த கனடிய தமிழர் புனர்வாழ்வு நிறுவனமும், திவாலாகிப் போன நிதி நிறுவனமும்!

**க**டந்த பல வருடங்களாக கனடாவில் லாப நோக்கற்ற தரும நிறுவனமாக (Charity) இயங்கி வந்த கனடியத் தமிழர் புனர்வாழ்வு நிறுவனம் (Canadian Foundation for Tamil Refugee Rehabilitation), 2011 டிசம்பர் 10ம் திகதி முதல் அதற்கான அந்தஸ்தை இழந்துள்ளதாக கனடிய வரி வசூல் அமைப்பால் (Canada Revenue Agency) அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் கணக்கு வழக்குகள் ஒழுங்கற்று இருந்தமை மற்றும் கனடாவுக்கு வெளியேயுள்ள 'தகுதியற்ற அமைப்பு'களுக்கு 700,000 டொலர்களை வழங்கியமை போன்ற காரணங்களே, அது தனது தரும ஸ்தாபன அந்தஸ்தை இழந்ததிற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

கனடாவின் தற்போதைய பிரதமர் ஸ்ரீபன் காபரின் முன்னைய அரசு பதவிக்கு வந்ததும், 2006ல் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக அறிவித்து கனடாவில் தடை செய்தது. பின்னர் புலிகளின் துணை அமைப்பு போலச் செயற்பட்டு வந்த 'உலகத் தமிழர் இயக்கம்' தடை செய்யப்பட்டதுடன், அதன் காரியாலயங்களும் 'சீல்' வைக்கப்பட்டு, சொத்துக்களும் முடக்கப்பட்டன.

தற்பொழுது கனடியத் தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தரும ஸ்தாபன அந்தஸ்து நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு புலிகளுக்குச் சார்பானது என்றும், எனவே அது கனடாவில் தடை செய்யப்பட வேண்டும் என்றும், கடந்த காலங்களில் சில தரப்புகளால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்த நிலைமையிலேயே இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க, கனடாவில் பல பங்குதாரர்களை கொண்டு சில முக்கிய தமிழ் பிரமுகர்களால் பெரும் விளம்பர தடல்புடல்களுடன் மிக அண்மையில் உருவாக்கப்பட்ட நிதி நிறுவனமொன்று, மிகக் குறுகிய காலத்தில் வங்குரோத்து நிலையை அறிவித்திருப்பது, மக்கள் மத்தியில் பல சந்தேகங்களை உருவாக்கியுள்ளது. சிலர் இதுபற்றிப் பிரஸ்தாபிக்கையில், யாழ்ப்பாணத்தில் சில வருடங்களுக்கு முன்னர் பலருடைய பணத்தை ஏப்பம் விட்டுவிட்டு தலைமறைவாகிய 'சப்றா பினான்ஸ்' என்ற (இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முக்கிய பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது) மோசடி நிதி நிறுவனத்துடன் ஒப்பிடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

# தேடப்பட்ட இலங்கையர் கனடாவில் கைது!

குற்றச்செயல்களில் ஈடுபட்டுவிட்டு கனடாவில் ஒளிந்து வாழும் 42 பேரின் விபரங்களை அந்நாட்டு குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி அண்மையில் வெளியிட்டுள்ளார். இந்த 42 பேரும் கனடா எல்லைச் சேவை முகவரகத்தால் தேடப்படுவோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மிக அதிகமாகத் தேடப்படுவோர் பட்டியலில் 15வது இடத்திலிருந்த இலங்கையைச் சேர்ந்த தர்மபாஸ்கரன் செல்லத்தம்பி ஜனவரி 10ம் திகதி ரொறன்ரோ பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது. இவர் தவிர குற்றச் செயல்களில் ஈடுபட்ட மேலும் 15 பேர் கைதுசெய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டு பிடிப்பதற்கு பொதுமக்கள் நல்ல ஒத்துழைப்பு வழங்கி வருவதாக கனடிய பாதுகாப்பு அமைச்சர் விக் தோவ்ஸ் தெரிவித்துள்ளார். இதேவேளை பயங்கரவாத செயல்கள், நிறுவனமயப்பட்ட குற்றச் செயல்கள் என்பனவற்றில் ஈடுபடுவோரின் புதிய பட்டியலை கனடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் விக் தோவ்ஸ் வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**'வானவில்'** ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு வாழ்த்துக்கள், ஆக்கபூர்வமான விமர்சனங்கள் அனுப்பிய அனைவருக்கும் நன்றி. உலகம் முழுவதும் உள்ள தமிழ் உறவுகள் வானவில் பத்திரிகையை மின்னஞ்சலில் பெற்று வாசிப்பதில் காட்டி வரும் ஆர்வத்தைப் பார்க்கையில், தமிழ் வாசகர்களுக்கு எத்தகைய ஒரு வாசிப்புத் தேவை இருந்துள்ளது என்பது பிரமிக்க வைக்கிறது. வானவில் இதழை மின்னஞ்சலில் பெற விரும்பும் புதிய வாசகர்கள் தமது முகவரிகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**- ஆசிரியர் குழு**